
# திருப்புகழ் அமுதம்

## ஆய்வுக்கோவை




பதிப்பாசிரியர்கள்

**முனைவர் வேல். கார்த்திகேயன்**

**முனைவர் வே. மகேஸ்வரி**

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | திருப்புகழ் அமுதம் ஆய்வுக்கோவை |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் வேல். கார்த்திகேயன்<br>முனைவர் வேல். மகேஸ்வரி |
| ISBN | : | 978 93 84607 09 8 |
| முதற்பதிப்பு | : | திசம்பர் - 2017 |
| தாள் | : | 16. கி.கி. புக் பிரிண்ட் |
| அளவு | : | 1/8 டெம்மி |
| பக்கம் | : | 416 |
| விலை | : | **உருவா 260/-** |
| வெளியீடு | : | குறிஞ்சி பதிப்பகம்<br>11, காந்தி வீதி விரிவு, (புதுத் தெரு),<br>செங்குட்டை, காட்பாடி, வேலூர் 632 007<br>அலைபேசி: 98421 78721 |
| ஒளியச்சு | : | கங்காராணி கணினியகம்<br>பொழிச்சலூர், சென்னை-74.<br>அலைபேசி : 98840 57267 |
| அச்சிட்டோர் | : | சீனிவாசா அச்சகம், சென்னை-14. |

68. பழநித் திருப்புகழில் திருமால் அவதாரங்கள்
முனைவர் க. முருகேசன் 343
69. அருணகிரிநாதரின் திருப்புகழ் அமுதம்
முனைவர் அரங்க. மு. முருகையன் 348
70. அருணகிரிநாதர் : பக்தி நெறியின் தமிழ் அடையாளம்
முனைவர் ப. இரவிக்குமார் 353
71. திருப்புகழும் தமிழிசையும் திருப்புகழில் சந்தக்கூறுகள்
இரா. ராகசுதா 357
72. அருணகிரி நாதரும் திருவண்ணாமலையும்
மு. இராதா தியாகராஜன் 362
73. திருப்புகழில் சந்தக்கூறுகளும் தமிழிசையும்
ஜி. ராஜலஷ்மி 367
74. திருப்புகழும்-யாப்பும்
சி. இராஜாராம் 371
75. திருப்புகழில் அறுபடை வீடுகள் - ஓர் பார்வை
பேராசிரியர் க. லதா 376
76. அருணகிரிநாதரும் அருளாளர்களும்
முனைவர் இரா. வாசுகி 380
77. திருப்புகழ் பதிப்புச் செம்மல்
வ. சு. செங்கல்வராயப் பிள்ளை
முனைவர் சாமி. விஜயலட்சுமி 384
78. அருணகிரிநாதர் பாடிய சேவல் மயில் விருத்தம்
முனைவர் இரத்தின. வெங்கடேசன் 389
79. திருப்புகழில் தாள இசைக் கருவிகள்
முனைவர் து. வேணுகோபால் 394
80. மாதர் மயக்கற வேண்டும்:- உளக்கூறுகள்
முனைவர் கோ. வேதாகமம் 399
81. அருணகிரிநாதரும் வில்லிபுத்தூராரும்
முனைவர் இரா. ஜெகதீசன் 403
82. திருப்புகழும் வாரியாரும்
ஜெ. ஜெயந்தி 408
83. நவரசங்களில் திருப்புகழ்
ஜோதி 412

# 68. பழநித் திருப்புகழில் திருமால் அவதாரங்கள்

**முனைவர் க. முருகேசன்**
தமிழ்த்துறைத் தலைவர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

பேரிருள் சூழ்ந்த இவ்வுலகில் அனைத்து உயிர்களும் துயில் கொண்டிருக்கக் கீழ்த்திசையில் ஞாயிறு தோன்றியவுடன் அவை விழிப்புற்றுத் தத்தம் வினைகளில் ஈடுபடுகின்றன. அதைப்போன்று ஆணவ இருளில் கட்டுண்டு உயிர்கள் உழன்றுகொண்டிருக்கும் போது விழிப்பூட்டி வீடுபேற்றை அருளும் தமிழ்க்கடவுள் முருகப் பெருமான். காலை இளம்பரிதியின் ஒளிப்புனல் கடற்பரப்பைத் தொடும்போது எழும் ஒளிவெள்ளம் போன்ற பன்னிருகை வேலன் குடிகொண்டுள்ள ஆறுபடை வீடுகளைப் பாடிய அருணகிரிநாதரின் சந்தக்கவி வானில் தனிநிலவாகத் தன்னொளி வீசும் பழனித் திருப்புகழ் பாடல்களில் திருமாலின் அவதாரச் சிறப்புக்கள் பதிவாக்கப்பட்டுள்ள பாங்கினை எடுத்துரைக்க இக்கட்டுரை முயற்சிக்கின்றது.

## உரகனைச் செல்வன் உலகளந்த வரலாறு

**"கருவினுரு வாகிவந்த வயதளவி லேவளர்த்து**
**கலைகள்பல வேதெரிந்து மதனாலே"**

எனத் தொடங்கும் பாடலில் மாபலிச்சக்ரவர்த்தி மூன்று உலகங்களையும் வசப்படுத்திக் பொண்டு ஆட்சிபுரிந்த சிறப்பும், அவனிடம் யாசகம் பெறவந்த வாமனமூர்த்தியின் அவதாரப் பெருமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பிருகுவமிச முனிவர்களைக் கொண்டு மாபலி அசுவமேத யாகம் வளர்த்துக் கொண்டுள்ள வேள்விச்சாலைக்குள் வாமனமூர்த்தி புகுந்தார். அவருடைய திருமேனியின் ஒளியால் அக்கினியும் ஆதித்தனும் ஒளிமழுங்கினார்கள். அவரைக் கண்டு யாகபதியாகிய பலி, எழுந்து எதிர்சென்று அடிவணங்கி, ஆசனம் தந்து திருவடியைப் பூசித்து, அப்பாத நீரைத் தன் தலையில் தெளித்துக் கொண்டு வேண்டியதைக் கேளுங்கள் தருகிறேன் என்று பணிந்தான்.




ISBN 978-93-84607-09-8

குறிஞ்சி பதிப்பகம்